**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் திங்கள்கிழமை**

**I.A.No. 1/2021 in O.S.No. 86/2017**

அருள்மிகு. சக்காலம்மன் திருக்கோவில் நிர்வாகி மற்றும் ஜமீன்தார்

அச்சுதராமன் .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) தங்கவேல் செட்டியார் (இறந்து விட்டார்)

2) அக்காயி அம்மாள்

3) லட்சுமி

4) செல்வராஜ்

5) கதிர்வேல்

6) ஆறுமுகம்

7) ராஜேஸ்வரி

8) நவநீதம்

9) வட்டாட்சியர், குளித்தலை

10) வருவாய் கோட்டாட்சியர், குளித்தலை

11) மாவட்ட ஆட்சியர், கரூர்

....... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 8 பிரதிவாதிகள்

//எதிர்//

1) மாதேஸ்வரி

2) ராஜேஸ்வரி

...... எதிர்மனுதாரர்கள்/ புரோபோஸ்ட் பார்ட்டி

இம்மனு என் முன்பாக 25.11.2022ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ஜாபர் சேட் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துள்ள நிலையில், 2 முதல் 8

எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், 9 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகக் கொண்டும், 1 மற்றும் 2 புரோபோஸ்ட் பார்ட்டி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

மனுவில் கண்டபடி இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களை சேர்த்து வழக்கினை மேல்நடத்த கேட்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 4 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்

1. தாவா வழக்கு விளம்புகை மற்றும் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருந்த போது 1ம் பிரதிவாதி கடந்த 13.12.2018 அன்று இறந்துவிட்டார். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி, 3ம் பிரதிவாதி மகள். இதை தவிர மனுவில் 2, 3 அவசியதரப்பினர்களும் மகள்கள் மற்றும் வாரிசுகள் ஆக உள்ளனர். மனுவில் கண்ட 1, 2 அவசியதரப்பினர்களை அசல் வழக்கில் இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளாக 12, 13 ம் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது உள்ளது எனவே இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு மனுவில் கண்ட நபர்களை வாரிசுதாரர்களாக சேர்க்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## எதிர்மனுதாரர்கள்/புரோஸ் நபர்கள் தரப்பு எதிர் உரை ஆட்சேபனை சுருக்கம்

2. மனுதாரர் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல. 1ம் பிரதிவாதி 13.12.2018ம் தேதி இறந்து விட்டார் என்பதையும், மேற்படி இறந்து போன 1ம் பிரதிவாதிக்கு மனுவில் கண்ட புரபோஸ்டு நபரும் 3ம் பிரதிவாதி லட்சுமி என்பவர் மட்டுமே வாரிசுகள் என்பதை வாதியே நிரூபிக்க வேண்டும். எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ

முன்வைக்கப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது விளம்புகை மற்றும் தொடர்பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது வா.சா1ன் சாட்சிய விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், 1ம் பிரதிவாதி 13.12.2018 ம் தேதியில் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை சேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் கண்ட 1 மற்றும் 2 அவசிய தரப்பினர்கள் இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்றும், அவர்களை அசல் வழக்கில் வாரிசுகளாக சேர்க்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் முன் வைக்கப்பட்டது. மனுவில் கண்ட புரபோஸ்ட் நபர்கள் இறந்து போன 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் என்பதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது. பொதுவாக ஒரு வழக்கில் ஒரு நபர் இறந்துவிடும் பட்சத்தில் அவரது வாரிசுகள் அனைவரையும் தரப்பினராக சேர்க்கவேண்டியது சட்ட நடைமுறையாகும். எனவே, நீதியின் நலன் கருதி 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ள இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**<u>முடிவாக,</u>**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**Sd/-P.பாலமுருகன்**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

மனுதாரர் தரப்பு சாட்சி- இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணம்-இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி-இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம்-இல்லை

**Sd/-P.பாலமுருகன்**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**